# தளிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments of*

**MASTER**

**INSTITUTES**

B. M. C. LANE, JAFFNA

*With Best Compliments of*

# Sriram's Textile Processing Co., Ltd.

KONDAVIL ROAD.

IRUPALAI,

JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிர்

திரள்: 1 இல: 1
பங்குனி, சித்திரை—1983
விலை 3/-

தொடர்புகட்கு:
ஆசிரியர் குழு
மறுமலர்ச்சிக் கழகம்
யாழ். பல்கலைக் கழகம்
யாழ்ப்பாணம்.

அச்சிடப்பட்டது:
யாழ், புனிதவளன்
கத்தோலிக்க அச்சகம்.

## உள்ளே...

| | |
|---|---|
| இலங்கையின் ஜனநாயகம் | 3 |
| அசாம் | 5 |
| மத்திய கிழக்குப் பிரச்சனை | 7 |
| ரொமேரோ | 10 |
| எல்சல்வடோர் | 12 |
| அம்புரொணக் | 15 |
| F. B. I. | 18 |

அட்டைப்படம்:

இது பாலஸ்தீன, அசாமிய படுகொலைகளை, சல்வடோரிய கெரில்லாக்களை கொண்டதாகும்.

## தளிர்க்கும் நினைவுகளில்...

நமது அனுபவங்களைக் கொண்டு மட்டுமல்லாது மற்றவர்களது அனுபவங்களையும் அறிந்து, புரிந்து கொள்வதனூடாகவே, சரியான அறிவை நாம் பெற்றுக் கொள்ள முடியும். விரைவாக வளர்ந்து கொண்டிருக்கும் விஞ்ஞான உலகில் நாளாந்தும் எத்தனையோ முக்கியமான விடயங்கள்—விஞ்ஞான வளர்ச்சிகள், படுகொலைகள், போராட்டங்கள் -- நடந்து கொண்டிருக்கும் வேளையில் இவ் நிகழ்ச்சிகளை அறிவதில் ஆர்வம் இருந்தும் போதிய வசதிகளற்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்நிலையானது எம்மத்தியில் உண்மையான அறிவின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது.

உலகின் பல்வேறு பாகங்களில் மனிதர்கள் படும் அவஸ்தைகளையும், அதற்கெதிரான அவர்களது போராட்டங்களையும் அறிதலினூடாக அம் மக்களை விளங்கிக் கொள்ள முடியும். இவ்வாறு பரந்த உலகைப் பார்ப்பதனூடாகக் குறுகிய வட்டத்துக்குள் சிறைப்பட்டிருக்கும் எமது மனவோட்டத்தை விரிவாக்கிக் கொள்ளக் கூடியதாயிருக்கும்.

இந்தவகையில் இது, நாம் அறிந்து கொண்டவற்றைத் தளிரினூடாக உங்களுடன் பகிர்ந்து கொண்டு ஒரு அறிவு தேடும் அவாவிலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது பற்றிய உங்கள் கருத்துக்களையும் ஆக்கங்களையும் எமக்கு சுதந்திரமாக எழுதுவதனூடாகத் தளிரை வாடவிடாது எமது அறிவினைப் பரஸ்பரம் வளர்த்துக் கொள்வோம். நேற்று வரை இருளில் இருந்தோம். நாளை ஒரு வசந்தம் வரும். அந் நம்பிக்கையில் எம் நினைவுகள் தளிரில் தளைக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திகள் :

### அதிகரிக்கும் அரச பயங்கரவாதம்

சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்ட "அரசாங்கங்களினால் புரியப்படும் அரசியல் கொலைகள்" என்ற தலைப்பிலான 131 பக்கங்களைக் கொண்ட விரிவான அறிக்கையில் 1980ஆம் ஆண்டு முதல் 20-ற்கும் அதிகமான நாடுகளில் அரசாங்கப் படைகளினால் புரியப்பட்ட சட்டவிரோத படுகொலைகள் ஆயிரமாயிரமாய் அதிகரித்து வந்துள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் அவர்கள் கடைப்பிடித்ததாகச் சந்தேகப்படும் கோட்பாடுகளின் அல்லது நடவடிக்கைகளின் அல்லது இனத்தின் காரணமாகவே கொலை செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு பலியானவர்கள் அனைவருக்கும் சட்டத்தின் பாதுகாப்பு மறுக்கப்பட்டுள்ளது. பல சந்தர்ப்பங்களில் சாதாரண உடையணிந்த இராணுவத்தினர் சந்தேக நபர்களை அவர்களது இல்லத்திலிருந்து கைது செய்து சென்றுள்ளனர். பின்னர் ஆயுதம் தாங்கிய கலவரங்களில் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

### சிம்பாவே—வளரும் குழப்பம்

சிம்பாவேயின் விடுதலைக்காகப் போராடிய இரண்டு இயக்கத் தலைவர்களும் நாட்டின் விடுதலைக்குப் பின்னர் தமக்குள் முட்டி மோதத் தொடங்கிவிட்டனர். நாட்டின் சுதந்திரத்திற்குப்பின் நடைபெற்ற பொதுத் தேர்தலில் முகாபேயின் கட்சி வெற்றிபெற, என்கோமாவின் கட்சி 2-வது பெரும்பான்மையைப் பெற்றது. என்கோமா ஒரு அரசியல் சதியொன்றை நடத்த முயன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு அரசாங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டதையடுத்து, அவரை மீண்டும் அரசில் சேர்க்கும்படி கோரி அவரது மாகாணத்தில் குழப்பங்கள் ஏற்பட்டன. என்கோமாவின் கார்ச்சாரதி, வடகொரியாவில் பயிற்சிபெற்ற ஐந்தாவது படைப்பிரிவினால் கொலைசெய்யப்பட்டதைத் தொடர்ந்து என்கோமா நாட்டைவிட்டு இங்கிலாந்திற்குத் தப்பியோடியுள்ளார். "என்கோமா விரும்பினால் நாட்டிற்குத் திரும்பலாம். ஆனால் சதி நடவடிக்கைகளுக்காக அவர் மீது வழக்குத் தாக்கலாகும்" எனப் பிரதமர் முகாபே தெரிவித்துள்ளார். என்கோமாவோ "தற்போதைய நிலையில் நாட்டிற்குத் தாம் திரும்பப்போவதில்லை" எனத் தெரிவித்துள்ளார்.

### நிக்கரகுவாவில் எதிர்ப்புரட்சியாளர்

நிக்கரகுவாவின் வட எல்லையிலுள்ள நாடான ஹொண்டுராசிலிருந்து தினமும் தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நாளாந்தம் குடிமக்கள் இருபதுபேர் வரை கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தினமும் ஒரு பாலமோ அன்றி ஒரு புகையிரதப்பாதையோ இக் கிளர்ச்சியாளரால் வெடிவைத்துத் தகர்க்கப்படுகின்றது. இத் தாக்குதல்களை மேற்கொள்ளும், நிக்கரகுவாவிலிருந்து வெளியேறி ஹொண்டுராசிலுள்ள எதிர்ப்புரட்சியாளருக்குப் பயிற்சியளிக்கவும் ஆயுதங்களை வழங்கவும் சி. ஐ. ஏ. இதுவரை 19 மில்லியன் டாலர்களைச் செலவிட்டுள்ளது. எல்சல்வடோரிலுள்ள கிளர்ச்சியாளருக்கு நிக்கரகுவாவிலிருந்து ஆயுதங்கள் கிடைப்பதைக் கட்டுப்படுத்தும் நோக்குடனே ஹொண்டுராசிலுள்ள நிக்கரகுவ எதிர்ப்புரட்சியாளர் செயல்படுகிறார்கள் என சி. ஐ. ஏ. கூறியபோதிலும், சி. ஐ. ஏ யின் இந் நடவடிக்கைகள் நிக்கரகுவாவின் புரட்சியை முறியடிப்பதையே நோக்கமாகக்கொண்டுள்ளது.

### இந்திய ஒருமைப்பாட்டுக்குச் சவாலாகும் சீக்கியர்

1 கோடியே 20 இலட்சம் சீக்கியர் வாழும் பஞ்சாப்பில் இவர்கள் மத, அரசியல் உரிமை கோரிப் போராட்டம் ஆரம்பித்துள்ளனர். இவர்களது போராட்டம் குறுகிய காலத்தில் வெகுவிரைவாக ஆயுதம் தாங்கிய போராட்டமாக மாறிவருகிறது. இவர்கள் மாநில சுயாட்சி, இந்தியப் பொருளாதாரத்தில் சரியான பங்கு, தமது பிரதேசத்திற்கூடாகச் செல்லும் ஆறுகளிலிருந்து நியாயபூர்வமான நீர், சீக்கியருடைய தனித்துவமான அடையாளங்களைப் பேணல் போன்றவற்றைக் கோரியும், மற்றும் மத ரீதியான உரிமைகளைக் கோரியும் போராட்டம் நடாத்துகின்றனர். அங்கு 25000க்கும் மேற்பட்டோர் கைதிகளாகியுள்ள அதே வேளை ஏறத்தாழ ஓராண்டுக்குள் 200 க்கும் மேற்பட்டோர் பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் மரணமாகியுள்ளனர். கடந்தவாரம் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் 100000 ற்கும் அதிகமான மக்கள் பங்கு கொண்டனர். அப்போது மக்களுக்கும் பொலிசாருக்கும் இடையே ஏற்பட்ட குழப்பத்தில் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு 20 பேர்வரை பலியாகியும், 1000க்கு மேற்பட்டோர் கைதாகியும் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்திற்குக் காவலாக இங்கே ஒரு தேர்தல்

" உறங்காத கண்களும், ஆறாத மனமுமாய்த் துடிக்கிறேன் மாமா! எப்படியும் ஆட்சியைக் கைப்பற்ற நீதான் சூழ்ச்சி சொல்ல வேண்டும் " என்று சகுனி மாமாவிடம் துரியோதனன் கேட்டான்.

சூது, சூழ்சியால் ஆட்சியைக் கைப்பற்ற சகுனி வழிசெய்தான். ஆட்சியைக் கைப்பற்றியதும் பாண்டவர்களை உடுதுணியற்ற நிலைக்கு ஆளாக்கினான் துரியோதனன். அப்போது அரசவை வாய்மூடி மௌனியாய்ப் பார்த்துக்கொண்டிருந்தது. மேலும் திரௌபதியை அழைத்துவந்து அவளின் ஆடைகளைக் களையுமாறு துரியோதனன் ஆணையிட்டான். அப்போதும் அரசவை மௌனியாகத்தானிருந்தது. அரசவையில் வீற்றிருந்த மூதறிஞர்கள் வீஷ்மர், துரோணர் முதலியோரும் இந்தக் காடைத்தனத்தின் முன், வாயடைத்துத்தான் இருந்தார்கள். இப்படித்தான் துரியோதனனின் தர்பார் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இவ்வாறு துரியோதனன் வைத்ததுதான் அரசவையிற் சட்டமாயிருந்தது. இவ்வாறு சகுனிமாமாவைப் பின்னணியாகக் கொண்டு துரியோதனனின் அரசவை செயற்பட்டது.

இன்று இலங்கைத் தேசிய அரசுப் பேரவை துரியோதனனின் அரசவையையும் மிஞ்சுகிறேன் பார் என்று கங்கணம் கட்டி நிற்கிறது போலும்?

1982 மார்கழியில் நிகழ்ந்த பொதுசன வாக்கெடுப்பு ஓர் சூழ்ச்சியேயாகும். ஏனெனில் சாதாரண பெரும்பான்மை வாக்குகளைப்பெற்று பாராளுமன்றத்தில் 2/3 பங்குக்கு மேற்பட்ட ஆசனங்களைப் பேணிக் கொள்வதற்கான ஓர் சூழ்ச்சியாகவே இப்பொதுஜன வாக்கெடுப்பு நடைபெற்றது. சாதாரணமாக ஜனாதிபதியின் கண்ணும், வாயும், மூக்கும், பல்லும் பதியாத பக்கங்களை அரசியற் திட்டத்தில் காணவே முடியாது. ஆனாலும் ஜனாதிபதியுடன் பாராளுமன்றம் முட்டிமோதக்கூடிய சில ஓட்டைகள் இருக்கத்தான் செய்தன. ஆனால் பொதுசன வாக்கெடுப்பின் மூலம் அந்த ஓட்டைகளும் அடைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இன்று இலங்கை அரசியலில் ஜனாதிபதி " எங்கும் நிறைந்தவராக, எல்லாம் வல்லவராகக் " காணப்படுகின்றார்.

பிரித்தானியப் பாராளு மன்றத்தால் ஆணைப் பெண்ணாக்க முடியாது, மற்றெல்லாம் முடியும் என்று சொல்வார்கள். ஆனால் இலங்கைப் பாராளுமன்றத்தால் ஆணை அலியாக்க முடிகிறதே? [பயங்கரவாதத் தடைச் சட்டம்–சித்திரவதைகள்] இலங்கைப் பாராளுமன்றம் ஒருபுறம் மௌனியாகவும், மறுபுறம் ஊதுகுழலாகவும் ஆகிவிட்டது. எப்படியோ இந்த மௌனி, ஊதுகுழல் பாராளுமன்றத்தின் அதிகாரம் உண்மை அதிகாரிகட்குத் தேவைப்படுகின்றது. இவ்வாறாகப் பாராளுமன்றத்தை மேலும் பொம்மையாக்கும் நடவடிக்கைகளில் ஒன்றுதான் 1982 மார்கழி பொதுசன வாக்கெடுப்பு.

1977 பாராளுமன்றத் தேர்தலில் யூ. என். பி. வெற்றிபெற்றிருந்த 19 தொகுதிகளில் இந்தப் பொதுசனவாக்கெடுப்பில் தோல்வியடைந்தது. இந்தப் 19 தொகுதிகளில் 18 தொகுதிகட்குத் தற்போது தேர்தல் வைக்கிறார்கள். இத்தேர்தல் யூ. என். பிக்கு ஏன் தேவைப்படுகின்றது? இது எவ்வளவு ஏமாற்று வித்தை என்பதைச் சுருக்கமாக விளக்குவதும், இந்தப் பாராளுமன்றத்தின் பொய்மைத்தனத்தை விளக்குவதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் முதலாவது குடியரசு அரசியற் திட்டத்தில் (1972) இலங்கை ஓர் சோஷலிச ஜனநாயகக் குடியரசு எனக் குறிப்பிடப் பட்டிருந்தது. இரண்டாவது குடியரசு அரசியற் திட்டத்தில் (1978) இலங்கை ஓர் ஜனநாயகக் குடியரசு என மாற்றம் செய்யப்பட்டது. இந்த இரண்டாவது குடியரசு அரசியற்திட்டம் பிரெஞ்சு நாட்டின் கோலிஸ்ட் அரசியற் திட்டத்தைப் பின்பற்றி ஜனாதிபதி முறையை நிர்மாணித்த போதிலும் அதனையும்விட அதிக வல்லமை வாய்ந்த வகையில் இலங்கை ஜனாதிபதிக்கு அரசியற் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. ஈரானிலும் பாராளுமன்றத்துடன் கூடிய ஜனாதிபதி முறை இருக்கிறது. ஆனால் ஈரானிய பாராளுமன்றத்தால் ஜனாதிபதியைப் பதவிநீக்கம் செய்ய முடியும். ஆனால் இலங்கையில் மாறாக ஜனாதிபதியால் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட முடியும். இந்த வகையில் இலங்கைப் பாராளுமன்றம் ஜனாதிபதிக்குச் சேவகம் செய்யவேண்டிய முறையில் ஆக்கப்பட்டுள்ளது. அதுவும் ஜனாதிபதியின் கட்சியே பாராளுமன்றத்திலும் கூடிய ஆசனங்களைப்பெற்று அதிகாரமுள்ள கட்சியாக இருக்குமானால் அங்கு ஜனாதிபதியின் அதிகாரத்திற்குத் தங்குதடை இருக்காது. மேலும் பாராளுமன்றத்தில் ஜனாதிபதியின் கட்சிக்கு 2/3 பங்கு பெரும்பான்மைப் பலம் இருந்துவிட்டால் அவரின் அதிகாரத்திற்கு எல்லையே இல்லை. ஏனெனில் இந்த 2/3 பங்கு பெரும்பான்மை இருக்குமேயானால் அரசியற் திட்டத்தை ஒவ்வொரு நிமிடமும் மாற்றிக்கொண்டிருக்கலாம். இந்தவகையில் 1978-ல் அறிமுகமான இலங்கை அரசியற்திட்டத்தில் இதுவரை நான்குதடவைகள் தமது அதிகாரத்திற்குத் தேவையான திருத்தங்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

ஏகபோக முதலீட்டு முதலைகளுக்குச் சேவை செய்யக்கூடிய வகையில், எதேச்சதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடியதான சட்டங்களை, எந்த நேரத்தில் எவைஎவை தேவையோ அவை அவற்றை ஆக்கக்கூடிய வகையிலேயே இன்றைய இலங்கைப் பாராளுமன்றம் காணப்படுகின்றது. இந்தவகையில் பாராளுமன்றத்தைக் கலைத்துப் புதிதாகத் தேர்தலை வைத்திருந்தால் இத்தகைய 2/3 பங்கிற்கு மேற்பட்ட பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவது சாத்தியமற்றிருந்தது. எனவேதான் பொதுஜன வாக்கெடுப்பின் மூலம் சர்தாரண பெரும்பான்மை வாக்கைப் பெற்று 2/3 பங்கிற்கு மேற்பட்ட பெரும்பான்மை ஆசனங்களை அப்படியே பேணிப் பாதுகாக்கும் ஓர் சூழ்ச்சி நடவடிக்கையாக 1982 மார்கழிப் பொதுஜன வாக்கெடுப்பை நடாத்தினார்கள்.

முன்பு யூ. என். பி வெற்றி பெற்றிருந்த 19தொகுதிகளிலுள்ள மக்கள் பொதுசன வாக்கெடுப்பில் பாராளுமன்றத்தை மேலும் ஆறு ஆண்டுகள் நீடித்தல் என்பதற்கெதிராக வாக்களித்திருந்தார்கள். ஆனால் இந்தப் 19 தொகுதிகளிலும் தனக்குக் கிடைத்த தோல்வியிலிருந்து அதிருப்தி வளர்வதைத் தடுப்பதற்கும், மேலும் தனது ஜனநாயக விரோத நடவடிக்கைகளை மறைப்பதற்கும் ஏற்ற ஓர் கண்கட்டி வித்தையாக இக் குறித்த 19 தொகுதிகளில் 18 தொகுதிகளிற்கு இடைத்தேர்தல் நடத்தப் போகிறார்கள். இங்கு ஒரு கேள்வியை எழுப்பினால் உண்மை தெரியும். அதாவது இந்த 19 தொகுதி மக்களும் தமது தொகுதி எம். பிக்கள் வேண்டாமென்று வாக்களித்தார்கள்? இல்லை; இந்தப் பாராளுமன்றம் மேலும் ஆறு ஆண்டுகளுக்கு நீடிக்கக் கூடாதென்றல்லவா வாக்களித்துள்ளார்கள். இதன்படி இந்த 19 தொகுதி மக்களையும் பொறுத்த வரையில் இவர்கட்கு இன்றைய பாராளுமன்றம் இயற்றும் சட்டங்கள் செல்லுபடியாகாது என்பது அர்த்தமாகும்.

அப்படியென்றால் இந்த 18 தொகுதிகளுக்கும் நடைபெற இருக்கும் கேலித்தனம் மிக்க தேர்தலைப் பார்த்துக் கேலியாகப் பின்வரும் கேள்வியை எழுப்பலாம்.

( தொடர்ச்சி 6-ம் பக்கம் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் மயானமாகிவரும் அசாம்

அங்கு ஒருபுறம் வாக்குகளும், மறு புறம் மனித சடலங்களும் எண்ணப்பட்டுக் கொண்டிருந்தன. இந்தவகையில் அசாமில் நடைபெற்ற தேர்தலானது பகிஸ்கரிப்பிற் கும், இரத்தக் களரிக்கும் மத்தியிலேயே நடைபெற்றது. தேர்தலுக்கு முன் ஒருசில வாரங்களுக்குள் மாத்திரம் வன்செயலால் 1,500-க்கும் மேற்பட்ட மனித உயிர்கள் பறிக்கப்பட்டு விட்டன. இரண்டுலட்சம் பேர் நேரடியாகப் பாதிக்கப்பட்டதுடன், இருபதினாயிரம்பேர் எதுவித அடிப்படை வச திகளுமற்ற அகதிகள் புனர்வாழ்வு நிலையம், புகையிரதநிலையம் என்பவற்றில் தஞ்ச மடைந்துள்ளனர். 1947இல் நடைபெற்ற இந்து-முஸ்லீம் கலவரத்தில் கொல்லப்பட்ட ஆறு இலட்சம் மக்களுக்கு அடுத்தபடியாக இந்தியாவில் நடைபெற்ற மிகப்பெரிய மனி தக்கொலை இதுவே. இருப்பினும் மத்திய அரசு எதுவித சலனமுமின்றித் தேர்தலையும், அதன்பின்பு ஆட்சியேற்பு விழாவினையும் நடாத்தி முடித்துவிட்டது.

## கைமாறிவிட்ட பொருளாதாரம்.

எழுபது இலட்சத்திற்கும் அதிகமான அசாமியர் அல்லாதவர்கள் அசாமில் குடி புகுந்துள்ளனர். இவர்களிற் பெரும்பாலா னோர் 1971-ம் ஆண்டின்போது பாகிஸ் தான், கிழக்குப் பாகிஸ்தான் (பங்களா தேஷ்) பிரிவினையில், கிழக்குப் பாகிஸ்தானி லிருந்து அகதிகளாக வந்தவர்களாவர். இந்தி யாவின் செழிப்புமிக்க மாநிலங்களில் முக்கிய மான அசாமில் தேயிலை உற்பத்தி, எண்ணெந் தொழிற்சாலைகள் என்பன பெருமளவில் காணப்படுகின்றன. இவற்றிலுள்ள வேலை வாய்ப்புக்களைப் பெரும்பாலும் அசாமியர் அல்லாதவர்களே கைப்பற்றியுள்ளனர். அசா மியர் அல்லாதவர்கள், நகரப் புறங்களில் மேன்மை பெற்றுள்ளதுடன், கிராமப்புறங்க ளின் செழிப்புமிக்க நிலங்கள் இவர்கள் வச மாகியுள்ளன. அசாமிய முஸ்லீம்கள்கூடக் குடியேறிய வங்காள முஸ்லீம்களால் பாதிப் புக்குள்ளாகின்றார்கள். அலி ஜான் எனும் கிராமத்து அசாமிய முஸ்லீம் ஒருவர் கூறு கிறார், "அல்லாவின் பெயரால் நமது சகோதரர்களுக்கு எவ்வாறு இவர்களால் தீங்குசெய்ய முடிகின்றது. நாம் இந் நிலத்தின் சொந்தக்காரர்கள்; இடைரென எல்லைகளைக் கடந்து இவர்கள் இங்கு வந்தார் கள். இவர்களை வெளியேற்றும்படி இந்துக் கள் கூறியபோதும் நாம் அதனை ஆட்சேபிக்க வில்லை. இப்போது இவர்கள் கும்பலாகவந்து நாம் பயிரிட்ட நெற்தானியங்களை அள்ளிச் செல்கிறார்கள்." இவ்வாறு தமது செல்வங் களை எல்லாம் அந்நியருக்குப் பறிகொடுத்து விட்டு வளம்கொழிக்கும் தமது பூமியில் மோசமான கூலித்தொழிலாளர்களாக அசா மிய மக்கள் அல்லலுறுகின்றனர்.

## பறிபோகும் அரசியலுரிமை.

செழிப்புமிக்க அசாமில் வறுமையுற்று வாழும் அசாமியர் அரசியல் ரீதியில் பெரிய தொரு பயமுறுத்தலை எதிர்நோக்கியுள்ள னர். அசாமியரல்லாத குடியேற்ற வாசிகள் வாக்காளர் பட்டியலில் பெருமளவு (45%-க் கும் மேலான) இடத்தினைப் பெற்றுக்கொண் டதினால், தமது பூமியிலேயே தமது அரசியல் அதிகாரம் கைமாறிப் போய்விடுமென அம் மண்ணுக்கு உரித்தான மக்கள் அஞ்சுகிறார் கள். இந்தியாவின் மற்றைய மாநிலங்களில் அம்மாநிலங்களைச் சேர்ந்த மக்கள் தமது அர சியலைத் தாமே நிர்ணயித்துக்கொள்ள, அசா மிலோ அசாமியரல்லாத குடியேற்ற வாசிக ளால் அசாமின் அரசியல் கட்டுப்படுத்தப் படுகின்றது. அசாமில் குடிபுகுந்துள்ள மக் கள் திருமதி இந்திராகாந்திக்கு விசுவாசம் மிக்கவர்களாக இருப்பதுடன், அவரின் தேர் தல் வெற்றிக்குக் காரணமாகவும் உள்ளனர் என தேர்தலை நேரடியாக அவதானித்த ஒரு சஞ்சிகை நிருபர் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### போராட்டத்தில் அசாமியர்.

ஐம்பது இலட்சம் அசாமியரல்லாதவர்களை வெளியேற்றவேண்டும்; அவர்களது பெயர்கள் வாக்காளர் பட்டியலிலிருந்து அகற்றப்பட வேண்டும் எனக் கோரிப் போராட்டம் நடாத்திவரும் அகில அசாமிய மாணவ இயக்கம், அகில அசாம்மக்கள் போராட்ட முன்னணி என்பன பிரதேச வாரியாக, தேர்தல் பகிஸ்கரிப்பினை மேற்கொள்ளும்படி கோரின. வேலை நிறுத்தங்களும் எதிர்ப்புக் கிளர்ச்சிகளும் நடைபெற, அதை முறியடித்த பாதுகாப்புப் படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையே மோதலேற்பட்டது. இதில் நூற்றிஇருபத்தேழு மரணங்கள் சம்பவித்ததாக அரசாங்க கணிப்பீடு தெரிவிக்கின்றது. அசாமியரல்லாத மக்கள் வாக்களிக்கச் செல்வதைத் தடுப்பதற்காகவே வன்செயல் நடைபெற்றதாக அசாமியத் தீவிரவாதியொருவர் தெரிவித்துள்ளார். கிராமங்களில் படுகொலை நடைபெற்றபோது ஆண்கள் தப்பியோட முடிந்ததினுல் குழந்தைகள், வயோதிபர்கள், பெண்களாகியோரே பலியானுர்கள். தேர்தலின்போது இந்திரா காங்கிரஸ் வேட்பாளர்கள் தாக்கப்பட்டார்கள். கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்கள். கூட்டங்கள் கல்லெறிக்கு உட்பட்டன. இக்கிளர்ச்சிமீது அனுதாபம் கொண்டோ அல்லது பயத்தினுலோ அசாமிய தேர்தல் உத்தியோகஸ்தர்கள் கடமையிலீடுபட மறுத்தனர். இதனுல் மத்திய அரசு வேறு மாநிலங்களிலிருந்து விமானமூலம் ஏழாயிரம் தேர்தல் உத்தியோகஸ்தர்களை அசாமிற்கு அனுப்பியது. இருப்பினும் பத்து வீத வாக்களிப்பே அங்கு நடைபெற்றதென ஒரு கணிப்பீடு தெரிவிக்கின்றது.

தமது பாரம்பரியமான சொந்த மண்ணிலேயே எதுவித அதிகாரமுமின்றி அந்நியராக்கப்பட்டு விடுவோமோ என எண்ணும் அந்த அசாமியமக்களது அச்சம் நியாயமானதே. அசாமியரல்லாத மக்களின் மரணங்கள் துன்பகரமானதே. அசாமியரல்லாத மக்கள் கொல்லப்படுகின்ருர்கள் என்பதற்காக அம்மக்களின் நியாயமான கோரிக்கையை ஏற்க மறுப்பது நியாயமாகாது. அசாமியரல்லாத மக்களது படுகொலைக்கும், அசாமியரது நியாயமான கோரிக்கைக்கும் மத்திய அரசின் இந்த அலட்சியப் போக்கு எவ்வகையான தீர்வினை அளிக்கும்?

---

4-ம் பக். தொடர்ச்சி

இந்த 19 தொகுதி மக்களின் தீர்ப்பை மதித்து அவர்களுக்குத் தேர்தல் நடத்த விரும்புகிறீர்களாயின் இவர்கள் உண்மையில் இப் பாராளுமன்றத்தை நீடிப்பதை நிராகரித்திருக்கிருர்கள் என்ற வகையில் இவர்கட்கு எனத் (19 தொகுதி) தனியான குட்டிப் பாராளுமன்றமொன்றை உருவாக்கி (ஆறுஆண்டுகட்கு) அத் தனிப் பாராளுமன்றத்திற்கான தேர்தலை நடாத்துங்களேன்.

ஜனநாயகத்தைக் கடைப்பிடிப்பவர் எனக் காட்டிக்கொள்வதற்காக, எதேச்சதிகாரத்திற்கு எதிராய் மக்கள் கிளர்ந்தெழாவண்ணம் தடுப்பதற்காய்ச் செய்யப்படும் அசல் ஏமாற்று நடவடிக்கைதான் இந்தப் 18 தொகுதிகட்கான இடைத் தேர்தலாகும். இந்த 18 தொகுதிகளிலும் யூ. என். பீ. தோல்வியடைந்தாலும்கூட யூ. என். பியின் 2/3 பங்குப் பலம் பாராளுமன்றத்தில் குறையாது.

புதிய அரசியற் திட்டத்தின்படி எம். பிக்களை பதவியிலிருந்து நீக்குவதற்கும், அதற்குப் பதிலாகத் தேர்தலின்றியே புதிய எம். பிக்களை நியமிப்பதற்கும் கட்சிக்கு அதிகாரமுண்டு. இதன்படி இன்று யூ. என். பி. எம். பிக்கள் ஐனுதிபதிக்குப் பக்கப்பாட்டுபாட மறுத்தால் அவர்களது எம். பி. பதவி காற்றில் பறந்துவிடும். புதிதாக வார்த்தெடுத்த பொம்மையொன்று அப்பதவிக்கு நியமிக்கப்பட முடியும். எனவே யூ. என். பி. எம். பிக்கள் கூட இன்று சுதந்திரமற்றவர்களாய், ஒருபுறம் அநியாயங்களுக்கு எதிராய் வாய்திறக்க முடியாதவர்களாயும், மறுபுறம் அநியாயத்தின் ஊதுகுழலாயும் தான் செயற்படுகிருர்களென்று சொல்லவேண்டியுள்ளது?

இத் தேர்தல் மக்களை ஆட்டுமந்தைகள் என நினைக்கிறதா? அல்லது "பேய் அரசாண்டால், பிணந்தின்னும் சாத்திரங்கள் (சட்டங்கள்)" என்ற பாரதியின் அடிகளை நிரூபித்துக் காட்டுகின்றதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்குப் பிரச்சனை :

## மேற்கு நாடுகள்-இஸ்ரேல்-பாலஸ்தீனம்-அரபு நாடுகள்

— விதுரன்

இரண்டாம் உலக மகாயுத்தத்தில் வெடித்துக் கிளம்பிய தீ பிளம்பு மத்திய கிழக்கில் வந்து வீழ்ந்தது. அது மத்திய கிழக்கில் அணையாத நெருப்பாய்ச் சுவாலைவிட்டு எரிந்து கொண்டிருக்கின்றது. மேற்குத் தேசங்கள் (அமெரிக்காவையும் மேற்குத் தேசங்கள் என்ற சொல்லில் அடக்குவது வழக்கம்) இந்தத் தீச்சுவாலையில் குளிர்காய்கின்றன. இந்த மேற்குத் தேசத்தவரின் கெடுபிடிகளின் நேரடி விளைவாற்றான் இஸ்ரேல் என்றொரு புதிய அரசு உலகப்படத்தில் உருவாகியதுடன், மத்தியகிழக்குப் பிரச்சனை எனும் ஓர் புதிய பிரச்சனையும் உருப்பெற்றது.

இந்த ஐரோப்பியரின் கெடுபிடித்தனத்தை மிகச் சுருக்கமாகப் பின்வருமாறு விளக்கலாம். இன்றைய இஸ்ரேலியப் பிரதேசம் கி. பி. முதலாம் நூற்றாண்டில் றோமப் பேரரசின் ஆதிக்கத்திற்குட்பட்டது. இப்பிரதேசத்தின் வரட்சியின் காரணமாகவும், றோமப் பேரரசின் ஓர்பகுதி என்பதின் பேரிலும் இங்கு வாழ்ந்துவந்த யூதர்கள் இப்பிரதேசத்தை விட்டுப் புலம்பெயர்ந்து ஐரோப்பாவின் நாலாபுறங்களிலும் உதிரிகளாய்க் குடியேறத் தொடங்கினர். இக்குடியேற்றம் பொதுவாகப் 15-ம், 16-ம் நூற்றாண்டுவரை நீடித்தது. இவ்வாறு குடியேறிய யூதர்கள் ஐரோப்பிய யூதர்கள் எனப்பட்டனர். இந்த யூதர்களுக்கு ஐரோப்பாவே தாயகமாகியது.

ஆனால், 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பாவெங்கும் யூத எதிர்ப்புவாதம் பரவலாகத் தலையெடுக்கத் தொடங்கியது. பொதுவாக ஐரோப்பாவெங்கும் யூதர்கள் இம்சைப் படுத்தப்பட்டு வந்தார்கள். இவ்வாறான தொடர்ச்சியான இம்சையின்போது ஏற்பட்ட ஓர் சம்பவம்தான் இன்றும் வரலாற்று முக்கியத்துவமுள்ளதாய் இருக்கின்றது. அதாவது 1896-ல் பாரிஸ் நகரில் ஓர் அப்பாவி யூதனைக் கள்வனெனக் குற்றஞ்சாட்டிப் பகிரங்கமாய் இம்சைப்படுத்தினார்கள். அங்கு கூடிய பிரெஞ்சுக்காரர்கள் "யூதனைக் கொல்லுங்கள்! யூதனைக் கொல்லுங்கள்!!" எனச் சத்தமிட்டனர், அப்போது ஓர் வழிப்போக்கனாகச் சென்றுகொண்டிருந்த தியோடர் ஹேர்சல் எனும் யூதனின் காதில் இந்த வார்த்தைகள் பட்டன. யூதனைக் கொல்லுங்கள் என்றுகத்திய இந்தக் காட்டுமிராண்டித்தனம்மிக்க வார்த்தை தியோடரின் நெஞ்சத்தில் ஆழப்பதிந்தது. அப்போது தியோடர் ஐரோப்பாவைவிட்டு வெளியேற வேண்டுமென்றும், ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு தமது மூதாதையர் அரசமைத்து வாழ்ந்த இன்றைய பாலஸ்தீனிய மண்ணிற்குத் தாம் சென்று அங்கு தமக்கென ஓர் தாயகத்தை அமைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் 1897-ம் ஆண்டு சுவிட்சர்லாந்தில் சியோனிச இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார்.

20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐரோப்பாவெங்கும் யூத எதிர்ப்புவாதம் தீவிரமாய்ப் பரவியது. ஆங்காங்கே யூதர்கள் கொலை செய்யப்பட்டு வந்தார்கள். இப்படி கொலைகளின் உச்சக்கட்டமாக நாசிச ஜேர்மனியில் (1930'களின் நடுப்பகுதியிலிருந்து 1940'களின் நடுப்பகுதி வரையிலான காலம்) முப்பது இலட்சத்திற்கும் அதிகமான யூதர்கள் மிலேச்சத்தனமான முறையில் கொலை செய்யப்பட்டார்கள். ஐரோப்பாவிலிருந்து யூதர்களைத் துடைத்தெறிவதே இந்த மிலேச்சத் தலைவன் கிட்லரின் நோக்கமாய் இருந்தது. (இவ்வாறு யூதர்களைப் படுகொலை செய்வதைத்தான் கிட்லர் 'Final Solution' எனச் சொல்லிக் கொண்டான்.) 1935ஆம் ஆண்டு ஜேர்மனியில் 95 இலட்சம் யூதர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தார்கள். 1945-ல் 35 இலட்சம் யூதர்கள் எஞ்சியிருந்தார்கள். இந்த 60 இலட்சம்பேரில் கொலை செய்யப்பட்ட 30 இலட்சத்திற்கும் மேலானவர் தவிர்ந்த மிகுதித் தொகையினர் ஜேர்மனியை விட்டுப் புலம் பெயர்ந்தோராவர்.

ஐரோப்பாவில் குடியேறிய யூதர்களின் தாயகம் ஐரோப்பாவேதவிர, இஸ்ரேல் அல்ல. 16-ம், 17-ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவைவிட்டு உலகின் நாலா புறங்களிலும் பலாத்காரமாய் ஆயுதமுனையிற் குடியேறிய ஐரோப்பியர்கள் குடியேறிய நாடுகளில் சிறப்புடன் வாழ்ந்து வருகையில், ஏன் 17-ம் நூற்றாண்டில் அமெரிக்காவில் குடியேறிய ஆங்கிலேயர் அங்கு ஓர் அரசு அமைத்து இன்று உலகின் ஓர் வல்லரசாக வாழ்கின்றனர். அங்கு வாழ்ந்துவந்த சுதேசிகளாகிய செவ்விந்தியர்களை அழித்தொழித்து ஆங்கிலேயர் குடியேறினார்கள். இவ்வாறு கொன்று குவிக்கப்பட்ட செவ்விந்தியரின் பசளையில் விளைந்த தேசம்தான் அமெரிக்கா. இவ்வாறு ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் சேர்ந்து உருவாக்கிய தேசம்தான் கனடா. இவ்வாறு இந்த ஐரோப்பிய அநியாயத்தின் புள்ளி விபரத்தை நீட்டிச் செல்லலாம். துப்பாக்கிகளுடன் ஐரோப்பாவிலிருந்து உலகின் நாலாபுறங்களிலும் குடியேறிய ஐரோப்பியர் அங்கு வாழ்ந்துவந்த சுதேசிகளின் இரத்தத்தையும், வாழ்வையும், வளத்தையும் உறிஞ்சிக் கொழுத்து வாழ்கிறார்கள். ஆனால் அதேவேளையில் மேற்காசியாவிலிருந்து பெட்டி படுக்கைகளுடன ஐரோப்பாவில் உதிரிகளாய்க் குடியேறிய யூதர்கள் இரத்தம் பீறிட ஐரோப்பியரால் அடித்துத் துரத்தப்பட்டிருக்கிறார்கள். யூதர்களுக்குச் சிறுபான்மையினரின் உரிமை கொடுத்து அவர்களை ஐரோப்பாவில் வாழவிட ஐரோப்பியர் மறுத்தார்கள். இதுதான் இவர்களின் ஜனநாயகம், மனிதாபிமானம் என்பதன் அர்த்தங்களாகும். யூதர்களின் தாயகம் ஐரோப்பிய மண்தான். அவர்கள் ஐரோப்பிய மண்ணின் சிறுபான்மையினர் உரிமை கோரிப் போராடி ஐரோப்பாவிலேயே வாழ்ந்திருக்க வேண்டும். இந்த ஐரோப்பியர் யூதர்களுக்குச் சிறுபான்மையின உரிமைகொடுத்து ஐரோப்பாவில் வாழ அனுமதிப்பதற்குப் பதிலாக ஐரோப்பாவை விட்டு அவர்களை வெளியேற்றும் வகையில் இஸ்ரேல் என்னும் ஓர் அரசை அமைப்பதில் பெரிதும் அக்கறை செலுத்தினார்கள். இன்றைய இஸ்ரேலியப் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்துவந்த பாலஸ்தீனியர்களைப் பலாத்காரமாக அவர்களை அவர்களின் தாயகத்தை விட்டுத் துரத்தவும், சியோனிச ஆக்கிரமிப்பு நிகழவும் துணைபோனார்கள். மத்திய கிழக்குப் பிரச்சனையை வைத்திருப்பதன் மூலம் நவகாலனித்துவ நலன்கள் மிக இலகுவாகப் பேணப்படுகின்றன. இவ்வாறு 'அ'விலிருந்து 'ஃ'வரை யூதப் பிரச்சினையில் ஐரோப்பியர் மிகப் பிழையாகத்தான் நடந்திருக்கிறார்கள். 2-ம் உலக யுத்தத்தின்பின் புதிய வல்லரசாக வெளிப்பட்ட அமெரிக்காவின் தலைமையிலான நவகாலனித்துவ நலனிற்குகந்த வகையிலேயே இன்றுவரை யூதப் பிரச்சினை கையாளப்பட்டு வருகின்றது.

1948 மே 14-ல் இஸ்ரேல் என்றொரு நாடு பிரகடனப்படுத்தப்பட்டதன் உடனடி விளைவாக டாயிர் யாசீர் எனும் பாலஸ்தீனப் பிரதேசத்தில் இருநூறு கிராமங்கள் அழித்தொழிக்கப் பட்டன. இங்கு வாழ்ந்த சிறுவர், பெண்கள், வயோதிபர், இளைஞர் முதலான சகல தரத்தினரும் சியோனிஸ்டுக்களால் படுகொலை செய்யப்பட்டனர். நாசிஸ்டுக்களிடம் யூதர் பெற்ற சித்திரவதை, கொலை அனுபவத்தை, ஐரோப்பிய மண்ணில் யூதர் கற்றுக்கொண்ட மிலேச்சத்தனத்தை மேலும் மோசமான வகையில் பாலஸ்தீன மண்ணில் யூதர் பிரயோகித்தனர். இந்த 1948 சியோனிச ஆக்கிரமிப்பின்போது ஏழு இலட்சம் பாலஸ்தீனர் அகதிகளாயினர். இன்றும் இவர்கள் நாடற்றவராய், வீடற்றவராய் வாழ்ந்து வருகின்றனர். சியோனிஸ்டுக்களின் கரத்தில் அமெரிக்க ஆயுதங்கள் சிரிப்பொலி எழுப்பும்போதெல்லாம் பாலஸ்தீன மக்கள் அழுகுரல் எழுப்புகிறார்கள், இரத்த வெள்ளத்தில் நீந்துகிறார்கள். 1948, 56, 67, 73 ஆகிய ஆண்டுகளில் தொடர்ச்சியாக இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற சியோனிசத் தாக்குதல்களின் மூலம் பல்லாயிரக்கணக்கான அராபியர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். பத்து இலட்சம் பாலஸ்தீனியர் அகதிகளாயினர். ஐநூற்றிருபத்திநான்கு பாலஸ்தீனக் கிராமங்களும் நகரங்களும் சியோனிஸ்டுக்களால் கைப்பற்றப்பட்டன. இவற்றுள் முன்னூற்றி எண்பத்தைந்து அழித்தொழிக்கப்பட்டன. எண்பத்தொரு சதவீத பாலஸ்தீன நிலம் சியோனிஸ்டுக்களால் கைப்பற்றப்பட்டு விட்டதுபோன்ற விபரங்களை 1974-ல் ஐ. நா. பொதுச் சபையில் அரபாத் தெரிவித்தார்.

இவ்வாறு பாலஸ்தீனத்தை மட்டும் கைப்பற்றியதோடு சியோனிஸ்டுகள் நின்றுவிடவில்லை. மேலும் எகிப்தின் சினாய் பிரதேசத்தையும், சிரியாவின் கோலான் குன்றுகளையும் கைப்பற்றினர். மேலும் அராபியர்களின் விஞ்ஞான – தொழில்நுட்ப வளர்ச்சியினைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் 1981-ல் ஈராக்கின் இருபெரும் அணுச்சக்தி உற்பத்தி நிலையங்கள் சியோனிஸ்டுக்களால் குண்டு வீசி நாசமாக்கப்பட்டது. (இவ்வணு ஆலைகள் பொருளாதார உற்பத்தி வேலைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தன). விஞ்ஞான – தொழில்நுட்பத் தேவைகட்காக அரபு நாடுகளை மேற்குலகில் தங்கிநிற்க வைப்பதன்மூலம் நவகாலனித்துவத்தை மத்திய கிழக்கில் உயிர்வாழவைக்க இத்தாக்குதல் உதவிபுரிகின்றது. இவ்வணு ஆலையைக் கட்டிக்கொடுத்த பிரெஞ்சுக்காரர் இதனைத் தாக்குவதற்கான ஒத்துழைப்பைச் சியோனிஸ்டுகளுக்கு வழங்கியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப் படுகின்றது.

இவ்வாறு இந்த அணு உலை தாக்கப்பட்டதன்பின்பு பெய்ரூட்டின்மீது இறுதியாகச் சியோனிஸ்டுக்கள் நடாத்திய தாக்குதலில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் வாசஸ்தலம் தாக்கப்பட்டுள்ளது. அகதிகள் முகாமில் வாழ்ந்த நிராயுதபாணிகளான பாலஸ்தீனியர்மீது மிக மிருகத்தனமான முறையிற் கொலை வெறியாட்டம் இடம்பெற்றுள்ளது. இதில் சிறுவர், பெண்கள், வயோதிபர், இளைஞர் உட்பட ஆயிரத்தி அறுநூறு பேர்வரை இறந்ததாகக் கூறப்படுகின்றது.

ஆரம்பத்தில் பாலஸ்தீனக் குழுத்தலைவர்களிடையே நடைபெற்ற குழுப் போட்டிகள், இழுபறிகள் என்பன சியோனிசக் குடியேற்றத்தை இலகுவாக்கியது. பொதுக் கொள்கையால் ஒருங்கிணைவதற்குப் பதிலாகக் குழு நலன்களாற் பிரிந்து நின்றனர். "ஓர் ஐக்கிய முன்னணிக்கு முதற்தேவை ஓர் பொதுக் குறிக்கோளாகும். எமது முன்னணி ஐக்கியமுற்றிருக்கவில்லை என்ற உண்மை எம்மால் எமது குறிக்கோளை ஒருமைப்படுத்த முடியவில்லை என்பதையே காட்டுகின்றது" என்று ஓர் அறிஞர் குறிப்பிட்டமை இந்த இடத்திற் குறிப்பிடக் கூடியதாக உள்ளது. குழுத் தலைவர்களின் தந்திகள், விண்ணப்பங்கள், சமரசப் போராட்டங்கள் என்பன சூரியனைச் சந்தித்த பனிமலையாகின. மிகக் காலம் தாழ்த்தித்தான் பாலஸ்தீனியர் மத்தியில் ஓர் ஐக்கிய இயக்கம் 1969 இல் உருப்பெற்றது. இந்தக் காலத்திற்குள் சியோனிஸ்டுக்கள் இராணுவ ரீதியில் பெரு வெற்றிகளை ஈட்டினார்கள். யூதர்களின் உண்மையான எதிரி மேற்குத் தேசத்தவர்கள். ஆனால் அவர்கள் அதனை மறந்து அவர்களுக்கும் அவர்களின் நவகாலனித்துவத்திற்கும் துணைபோகிறார்கள், ஆக்கிரமிப்பாளர்களாய் இருக்கிறார்கள். யூத ஆக்கிரமிப்பிற்கு எதிரான நல்லெண்ணம்மிக்க யூதர்கள் பலவீனமான ஒரு சிறு குழுவினர்களாகவே காணப்படுகின்றார்கள். இரண்டாம் உலகயுத்தத்தில் வெடித்த இப்பிரச்சினை இன்றும் நவகாலனித்துவத்திற்குச் சோறுபோடும் பிரச்சனையாகவே இருந்துவருகிறது. ஏதோ ஒருவகையில் மேற்குத் தேசத்தவர் இன்றும் உலகை ஆள்கிறார்கள். 16-ம் நூற்றாண்டிற் பறக்கத் தொடங்கிய மேற்குத் தேசத்தவரின் ஆக்கிரமிப்புக் கொடி இன்றும் பலபல வடிவங்களிற் பறந்துகொண்டே இருக்கிறது. இந்த சியோனிச ஆக்கிரமிப்பையும், நவகாலனித்துவத்தையும் எப்படி வீழ்த்துவது? நல்லெண்ணம் கொண்ட யூதர்களின் உள்ளத்திலும் இக்கேள்வி உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரித்தும் உயிர்வாழும் அதிமேற்றிருணியார்

24-03-80 மாலை 6-25 மணியிருக்கும். இரவின் இருள் மெதுவாக பிரச்சனைகள் நிறைந்த சான்சல்வடோர் நகரை விழுங்கிக்கொண்டிருந்தது. அங்கிருந்த தேவாலயமொன்றில் வறுமையினுல்வாடும் தொழிலாளரும், விவசாயிகளும் கலந்துகொண்டிருந்தனர். தேவாலயத்தில் பீடத்தில் பூசையை நடத்திக்கொண்டிருந்தவர் 63 வயது நிறைந்த அதிமேற்றிராணியார் ஆர்ஞலோ ரெுமேரோ. சடுதியாக துப்பாக்கிச்சத்தம் கேட்டது. அதிமேற்றிராணியார் ஆர்ஞலோ பலிபீடத்திலேயே வீழ்ந்து ஆவியை விட்டார். 'ஓர்டென்' என்ற வலதுசாரிக் கொலைக் கும்பலைச் சேர்ந்தவர்கள் தேவாலயத்தைவிட்டு சீக்கிரமாக நழுவினர்.

இதுநடந்தது பங்குனி 24-ம் நாள் 1980-ம் ஆண்டு. தொடர்ந்து சிலநாட்கள் நாட்டில் ஒடுக்கப்பட்டவர்கள் ஆட்சியாளருக்கு எதிராக கிளர்ச்சிகள் செய்தனர். ரெுமேரோவின் பேரால் ஆட்சியாளரை பதவியிலிருந்து இறங்கும்படி பணித்தனர். ஆனுல் அவர்கட்குக் கிடைத்த பதில் துப்பாக்கிக் குண்டுகளே. கலகம் அடக்கப்பட்டபோது ஏறத்தாள 40 பேர் கொல்லப்பட்டனர். ரெுமேரோவின் மரணச்சடங்குகூட அரச ஆயுதப் படையினரால் குழப்பப்பட்டு பலர் கொல்லப்பட்டனர்.

ரெுமேரோவின் கொலைக்குக் காரணம் யாவரும் அறிந்ததே. எல்சல்வடோரில் பெரிய நிலச் சொந்தக்காரரும் செல்வந்த வியாபாரிகளும் அடங்கிய ஒருகுழு ஆட்சி அதிகாரம் செலுத்தியது. நாட்டின் விவசாயிகளையும் தொழிலாளர்களையும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடைய ஒத்துழைப்புடன் பொருளாதார ரீதியாக சுரண்டியது மட்டுமல்லாது, பொதுமக்கள் அரசுக்கெதிராக நியாயம் கோரி நடத்திய ஊர்வலங்களை அரசு இராணுவபலத்தால் இரத்தத்தில் குளிப்பாட்டியது.

ஆனுல் அதிமேற்றிராணியார்இந்த அநீதிகளைப்பயமின்றிஎதிர்த்தார். ஆட்சியாளர் பதவியிலிருந்து இறக்கப்பட்டு, புதியதொரு சமூக உணர்வுள்ள அரசு உருவாக்கப்பட வேண்டுமென்று கோரிஞர். ஆட்சியாளருக்கு எதிராகப் போரடிவந்த கொரிலாப் படையினருக்கு ஆதரவு வழங்கிஞர்.

இவற்றுக்கு கிடைத்தபரிசு துப்பாக்கிச்சூடு. ஆனுல் இரண்டு வருடங்களின் பின் இன்று சுதந்திரப் போராளிகள் தலைநகரை அண்மித்துவந்து கொண்டிருக்க, நாட்டில் ஒடுக்கப்பட்டவர்களின் மனதில் அதிமேற்றிராணியார் இன்றும் வாழ்கிருர், உற்சாகமளிக்கிருர்.

இந்த 24-ம் திகதியில் அவரை நினைவுகூரும் முகமாக அவரை உணர்ந்துகொள்ளு முகமாக அவரது இறுதிவார்த்தைகளை ''கிறிஸ்டியன் வேக்கரி''லிருந்து தமிழாக்கி இங்கு பிரசுரிக்கின்ருேம்.

**மரணத்தை எதிர்கொள்ளல் குறித்து :**

எனது வாழ்வு பறிக்கப்படுமென பல தடவைகள் எனக்குப் பயமுறுத்தல்கள்வந்து விட்டன. ஒரு கிறிஸ்தவன் என்றரீதியில் அவற்றை நான் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். புனர்ஜென்மம் இன்றி நிகழும் மரணத்தினை என்ஞல் நம்பமுடியாது. அவர்கள் என்னைக் கொலைசெய்வார்களேயானுல் சல்வடோர் மக்களிடையே மீண்டும் நான் தோன்றுவேன். அவர்களுடைய இதயங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் மீண்டும் நான் உயிர்த்தெழுவேன். இதனை நான் தம்பட்டமடித்துப் பறைசாற்ற விடைலை. மிகுமிஞ்சிய கர்வத்தில் கர்ஜிக்க வில்லை; என்னால் முடிந்தளவு அடக்கத் துடனேயே இதனைக் கூறிக்கொள்கிறேன்.

ஒருமேய்ப்பன் என்ற ரீதியில் தெய்வீக விதிக்கு அடிபணிந்து, நான்நேசிக்கும் மனிதர்கட்காக—சகல சல்வடோர் மக்களுக்காக, என்னைக் கொலைசெய்யப் போவதாக பய முறுத்துபவர்கள் உட்பட—எனது வாழ்வினை அர்ப்பணிக்க நான் கடமைப்பட்டவன். என்னைக் கொலைசெய்யப் போவதாக பயமுறுத்து பவர்கள், தமது பயமுறுத்தல்களை நிறை வேற்ற வேண்டிய நிலைக்கு அவர்கள் செல்வது அத்தியாவசியமெனில், நீங்கள் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். நான் எனது இரத்தத்தினை நீதிக்காகவும், எல்சல்வடோரின் புனர்ஜென்மத்திற்காகவும் கடவுளிடம் காணிக்கையாக செலுத்துகிறேன்.

ஆனால், நான் எனது வாழ்வினைப் பரித்தியாகம் செய்வதனைக் கடவுள் ஏற்றுக் கொள்வாரானால், நான் சிந்துகின்ற இரத்தம் விடுதலைக்கான ஒரு விதையாகவும் மிக விரைவில் நனவாகப்போகின்றன என்பதற்கான ஒரு அறிகுறியாகவும் இருக்கும் என்ற எனது நம்பிக்கை வீண்போகாது.

எனது மக்களின் விடுதலைக்காகவே எனது மரணம் நிகழும். அது எதிர்காலத்தை நோக்கிய நம்பிக்கைப் பிரகடனமாக அவர்களது இதயங்களில் பதியும்.

ஒரு பாதிரி மரணமடைந்துவிடலாம். ஆனால் கடவுளின் இல்லமான மக்கள் என்றும் மரணிக்க மாட்டார்கள்.

## ஆயுதப் படையினருக்கு :

மக்களுடைய ஆதரவற்ற எந்தவொரு அரசும் காத்திரமானதாக இருக்கமுடியாது. மக்களை வருத்துவதன்மூலம், அவர்களுடைய இரத்தத்தினை ஆறாக ஓடச் செய்வதன்மூலம் அவர்கள்மீது தன்னைத் திணித்துவிட எந்த அரசாங்கத்தினால் முடியும்?

படைவீரர்கட்கும், தேசிய பாதுகாப்பு வீரர்கட்கும் பொலிஸாருக்கும் நான் ஒரு விஷேட வேண்டுகோளை விடுக்கிறேன்: சகோதரர்களே! நீங்கள் ஒவ்வொருவரும் எங்களில் ஒருவர் அன்றோ? நாங்கள் யாவரும் ஒரேதாயின் பிள்ளைகள். நீங்கள் கொலை செய்யும் ஒவ்வொரு விவசாயியும் உங்களுடைய உடன்பிறப்புகள் என்பதை நினைத்துப் பாருங்கள்.

கொலைசெய்யுமாறு உங்களைப் பணிக்கும் மனிதனின் கட்டளையை நீங்கள் கேட்கும் போது "நீ கொலைசெய்யாதிரு" என்ற கடவுளின் வாசகத்தை சிந்தியுங்கள். கடவுளின் சட்டத்துக்கு முரண்பாடான எந்தக் கட்டளைக்கும் போர்வீரன் ஒருவன் அடிபணிய வேண்டிய அவசியமில்லை. பாவகரமான கட்டளையைப் பின்பற்றுவதை விடுத்து உங்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்து, உங்களுடைய மனச்சாட்சியின் குரலாக நீங்கள் நடக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

கடவுளின் உரிமைகளையும், கடவுளின் சட்டங்களையும் பாதுகாக்க வேண்டிய ஒரு தேவாலயம் – மானுடத்தின் பெருமையாக உள்ளதேவாலயம்—இத்தகைய பாதகச் செயல்களைக் கண்டபின்னரும் வாய் மூடிக் கொண்டு மௌனியாக இருக்கமுடியாது. இவ்வளவு இரத்தத்தினால் தோய்ந்த சீர்திருத்தங்கள் யாவும் பலனற்றுப்போய் விட்டன என்ற உண்மையை நாம் அரசாங்கத்தினை உணரச்செய்ய வேண்டும். கடவுளின் பெயரால் அளவுகடந்த துன்பத்தினால் வானத்தைஎட்டும் அவலக்குரலை எழுப்பும் எமதுமக்களின் பெயரால் நான் உங்களிடம் மன்றாடுகிறேன். தயவுசெய்து மக்கள்மீது மேற்கொண்டுள்ள அடக்குமுறையை நிறுத்துங்கள்!

## புரட்சி செய்வதற்கான உரிமை :

கிறிஸ்தவர்கள் சண்டைக்குப் பயந்தவர்களல்ல. எவ்வாறு சண்டையிடவேண்டும் என்பதை அவர்கள் நன்றாக அறிவார்கள். ஆனால் அவர்கள் அமைதியை நேசிப்பவர்கள். ஒரு சர்வாதிகார அரசு மனித உரிமைகளை நசுக்கியும், தேசத்தின் பொது நலன்களை சீரழித்துக்கொண்டும் இருக்கும் போது அது பேச்சுவார்த்தைக்கான பரஸ்பர புரிந்துகொள்ளலுக்கான நியாயபூர்வமான காரணங்களுக்கான பாதைகள் யாவற்றையும் மூடி நாட்டினைச் சீரழித்தலை இனிமேலும் தாங்கமுடியாதபோது, தேவாலயம் தனது குரலை உயர்த்துகிறது. மக்கள் அவ் அரசுக்கு எதிராக கிளர்ந்தெழுந்து ஆயுத மேந்திய போராட்டத்தில் ஈடுபடுவதற்கு அவர்களுக்குள்ள சட்டரீதியான உரிமை குறித்துத் தனது குரலை உயர்த்துகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தினை வென்றுவரும் சல்வடோர் கெரில்லாக்கள்

இங்கு, நாட்டின் மொத்தத் தேசிய செல்வத்தில் 60 வீதம் இங்குள்ள 14 செல்வந்தர் குடும்பங்களின் கையிலுள்ளது. அதேவேளை 40 வீதமான விவசாயிகள் நிலமற்றவர்களாக உள்ளனர். சிற்றுடமை விவசாயிகளிலும் 80 வீதத்திற்குமேல் ஒரு ஏக்கருக்கும் குறைந்த நிலத்தையே கொண்டுள்ளனர். கிராமிய வேலையின்மையானது இங்கு நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது நகரங்களில் சேரிவாழ் வறுமையானது அதிகரித்துச் செல்கின்றது. இவற்றுக்கு எதிராகக் கடந்த 50 ஆண்டுகளாக சல்வடோர் மக்கள் போராடி வருகின்றனர். குறிப்பாகக் கடந்த 4 வருடங்களாக இப்போராட்டமானது மிக உக்கிரமாக நடைபெறுகின்றது. இப்போராட்டங்கள் தொடர்பாகக் கடந்த சிலமாதங்கள் நடைபெற்ற சில அம்சங்களையே இக்கட்டுரையில் தொகுத்துள்ளோம். இக்கட்டுரையானது, 'லங்கா கார்டியன்', 'திறன்மா' எனும் பத்திரிகைகளிலிருந்து மட்டுமே தொகுக்கப்பட்ட ஒன்றாகும்,

அரச படையினர் ஓசைப்படாமல் தனித்திருந்த அப்பண்ணைக்கு வந்தனர். முதலாவது வீட்டிலிருந்து அவர்கள் 65 வயதான ஒருவரை அழைத்து கைகளை ஒன்றாகச் சேர்த்துக் கட்டியபின்னர் அவரது மனைவியிடம் "கணவன் திரும்பும்வரை காத்திருக்கும்படி கூறிவிட்டுச் சென்றனர்" ஆனால் கணவன் திரும்பவேயில்லை.

நூற்றுக்கணக்கான அரசபடையினர் சுவடே தெரியாமல் ஆற்றோடையைக் கடந்து கோதுமை வயல் வெளியூடாக வேறு ஆறு குடும்பங்களும் தங்கி வாழ்ந்த குடிசைகளை அடைந்தனர். இதே நிகழ்வுமுறை மீண்டும் நடந்தது. "எங்கள் வீட்டினை நெருங்கிய அப்போர்வீரர்கள் என் கணவனிடம் உடுப்பை அணியுமாறு கூறி, அவரைத் தங்களுடன் கூட்டிச்செல்ல இருப்பதாகக் கூறினர்" என ஐந்து குழந்தைகட்குத் தாயான விதவையாக்கப்பட்ட பெண்ணொருத்தி கூறினாள்.

"எனது 14 வயது மகனையும் தம்முடன் கூட்டிச்செல்ல வேண்டுமெனக் கூறினர். நான் மன்றாடினேன், அவனுக்குச் சுகமில்லை அவனைக் கூட்டிச்செல்ல வேண்டாமென. வெளிச்சத்தினை அணைத்துவிட்டுப் படுக்கும்படி கூறினர் நடு ராத்திரியில் தன்னைக் கொலைசெய்ய வேண்டாமென மன்றாடும் என் கணவனின் குரலையும், அவஸ்தையால் வீரிடும் அவரது சத்தத்தையும் கேட்க முடிந்தது" என்று வேறொரு பெண்.

இவை இன்று எல்சல்வடோரில் நாளாந்த நடைமுறைகளாக உள்ளன. இதுவரை எல்சல்வடோரில் 50,000-க்கு மேற்பட்ட மக்கள் அரச படைகளினால் கொல்லப்பட்டுள்ளனர். பலர் அகதிகளாக அயல்நாடுகட்கு ஓடியுள்ளனர். இவ் அடக்குமுறைகள் எல்சல்வடோரில் ஆயுதம்தாங்கிய கெரில்லாப் போராளிகளை உருவாக்கியது. இந்த பரமுண்டா மாட்றி தேசியவிடுதலை முன்னணி (Fmln) என்னும் முன்னணி கெரில்லா இயக்கமானது இன்று எல்சல்வடோரினை விடுவிக்கும் நிலைக்கு வளர்ந்துள்ளது. Fmlnவின் ஐப்பசிமாத தாக்குதலின்போது இவ் இயக்கமானது அரசுக்கு இராணுவ இழப்புடன் பிரதேச இழப்பினையும் ஏற்படுத்தியது. பல முனைகளிலும் தொடர்ந்து துரிதப்படுத்தப்பட்ட தைமாத தாக்குதலில் அரசபடைப் பிரிவுகள் முழுவதனையும் நிர்மூலமாக்கக் கூடியநிலை தோன்றக்கூடிய சூழ்நிலைகள் உருவாகியுள்ளன.

கெரில்லா தாக்குதல்களது தொடர்ச்சியான வெற்றிகள் :

தை 10, வானொலி வென்செரமோஸ் (கெரில்லாக்களது செய்தி வெளியீட்டு நிலையம்) சான்சல்வடோரிலிருந்து 64 கிலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீற்றருக்கு அப்பாலுள்ள 12600 மக்களைக் கொண்ட ரேஜுல்டா நகரை Fmln கெரில்லாக்கள் கைப்பற்றியுள்ளதாக அறிவித்தது. இந்தத் தாக்குதலில் 43 றைபிள், 90 mm பில்ட் துப்பாக்கி, m79 கிறனெட் லோன்ச்சர் (Greade launcher), m60 இயந்திரத் துப்பாக்கி என்பவற்றினைக் கைப்பற்றியதோடு 23 இராணுவ வீரர்களையும் கைதிகளாக்கினர்.

Fmln சான்சல்வடோரின் வடக்கே 75 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள சான்பிரான்சிஸ்கோ மொரோசன் பகுதியையும் தனது கட்டுப்பாட்டுள் கொண்டுவந்தது. இதுவே விடுவிக்கப்பட்ட இரண்டாவது நகரமாகும். இத்தாக்குதலில் Fmln கெரில்லாக்கள் எட்டு இராணுவ வீரர்களோடு 19 பாராளுமன்ற உறுப்பினர்களையும் கைதிகளாக்கியதோடு, 29 றைபிள்களையும் கைப்பற்றினர்.

மாசி 6, வானொலி வென்செமோஸ், கெரில்லாக்கள் தாம் கைப்பற்றிய மீன்குஏரா, பேர்குயின், சான்பெர்னண்டோ ஜக்கோஎஸ்ற்றிகியா, ரொறேவா, காகோபெரா, யோஆரேகா மற்றும் நகர்களைத் தொடர்ந்தும் ஸ்திரமாகப் பேணுவதனால் அரசபடைகள் பின்வாங்கும், பின்வாங்குகின்றன என அறிவித்தது.

மாசி 20, கிறன்மா பத்திரிகை அச்சுக்குப் போகுமுன், சான்சல்வடோரின் வடக்கே உள்ள சுசிற்றோஎனும் நகரைச்சுற்றி இறுக்கமாக அமைக்கப்பட்டிருந்த இராணுவ படை, கெரில்லாக்களது தாக்குதலால் முழுமையாக அழிக்கப்பட்டது. Fmlnஇன் ஜெனரல், கெரிலாக்கள் நாட்டின் வடகிழக்குப் பகுதியில் பெரும் பங்கினைத் தமது கட்டுப்பாட்டுள் கொண்டுவந்து விட்டதாகக் கூறினர்.

**அரசபடைகள் பின்வாங்கக் காரணம்:**

Fmln விடுதலைப் போராளிகளால் ஆரம்பம் தொட்டு நடாத்தப்பட்டுவந்த உறுதியான, தோல்வி காணாத தாக்குதல்களினால் மனஉறுதி குறைந்த அரசபடைகள் இன்று தாக்குதலுக்கு நில்லாது பின்வாங்கி உயிரைக் காப்பாற்ற முயற்சிக்கின்றன. மற்றும் Fmlnஇனது யுத்தக் கைதிகளைச் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு மாற்றும் கொள்கையானது அரச படையினரது சரணடைதலைப் பெரிதும் ஊக்குவித்தது. இது தொடர்பாக தை 19 லத்தின் அமெரிக்க பிரதேச அறிக்கை "Fmlnஇன் கைதிகளை விடுவிக்கும் கொள்கையானது அரசபடை வீரர்களிடையே கூடிய தாக்கத்தினை ஏற்படுத்தியது" என்று குறிப்பிட்டது.

**போராட்டத்திற்கு எதிராக அமெரிக்க உதவிகள்.**

நீகனும் சல்வடோர் தளபதிகளும் இணைந்து இதனை ஒடுக்க நடவடிக்கை எடுத்துவருகின்றனர். Fmlnஇனது தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்குமுகமாக அவரது முழு இராணுவத்தின் நாலிலொரு பகுதியை மொரோசனில் அமர்த்தியுள்ளது. இப்படையினரில் இரண்டில் ஒருபங்கு அமெரிக்க பயிற்சிபெற்ற அற்லகற்ல் (Atlacatl), அற்ரோனல் (Atonal), றமோன் பெலோசா (Ramon Bellose) படை அணியினை உள்ளடக்கியுள்ளது. இவர்கள் இப்போது சான்பிரான்கிஸ்கோ கொற்றேராவினைச் சுற்றி இறுக்கமாக அமர்த்தப்பட்டுள்ளனர்.

அமெரிக்க உதவிகள் பெருமளவில் இங்கு குவிக்கப்பட்டபோதிலும் Fmln தொடர்ந்து அடைந்துவரும் வெற்றிகள் அரசுக்கு பெரும் தலையிடியினைக் கொடுப்பதாக உள்ளது. அங்கு நடைபெற்றுவரும் இவ் உறுதியான போராட்டமானது எல்சல்வடோரினை சுதந்திர நாடாக உருவாக்கும் என்ற நம்பிக்கையை அளிக்கின்றது.

★ ★ ★





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெரில்லா

தமிழில் : மாதங்கி

கிழிந்துபோன உடையில்
அழுக்கிருக்கும்.
விடுதலை கொணரும்
அவன் வருவான்,
ஆயுதம் தாங்கியவனாக
சிரிப்பான், பாடுவான்
ஆம்
அவனொரு கெரில்லா.

அவன் அந்நியப்பட்டவன்
உடைக்கும், உறைவிடத்துக்கும்
உணவுக்குக் கூட,
வாழ்ந்து கொள்வது எப்படித்
தெரியுமா?
கடுங்குளிரில் வாடியும்,
கடும் மழையில் நனைந்தும்
இன்னமும் சிரித்தே பாடுவான்.

அமைதியும், விடுதலையும், அவனது
கரங்கள் கவ்விய
ஆயுதம் தரும்,
எதிரிகளை விரட்டி.

துயில் கலைக்கும்
ரம்மியமான காலைப் பொழுதினிலே,
அவனிடம் நீர் இருக்காது
பனித்துளிகளைத் தவிர.
''தோழனே!
நீயேன் துன்பப்படுகிறாய்''
புல்லினங்கள் பிரமித்தே
அவனிடம் கேட்கும்.
அப்பொழுதும் சிரித்தே பாடுவான்
''விடுதலை கொணர்வேனென''.

1975 யூன் 25-ல் அபிரிக்க நாடான மொசாம்பிக்கானது போர்த்துக்கீச ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது. இவ் விடுதலையானது 'பிறில்லிமோ' (FRELIMO) எனும் கெரில்லா அமைப்பினால் மக்கள் ஆதரவுடன் பெறப்பட்டது. 'பிறில்லிமோ', ஆயுதப் போராட்டக் காலத்தில் வெளியிட்ட 'மொசாம்பிக்கின் புரட்சி' என்ற ஆங்கில சஞ்சிகையில் இக் கவிதை பிரசுரிக்கப் பட்டது. இது பிறில்லிமோ ஆயுதப் போராளி ஒருவரால் எழுதப்பட்டது. அக் கவிஞரைப் பொறுத்தவரை கவிதை ஒரு ஆயுதம், அதன் சொற்கள் தான் ரவைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்புறெனக் (AMPRONAC)
# நிக்கரகுவாவின் மாதர் அமைப்பு

1979 ஆடி மாதம் மத்திய அமெரிக்காவிலுள்ள நிக்கரகுவாவில் அமெரிக்க கைக்கூலியாக விளங்கிய அனஸ்டாசியோ சோமசாவினுடைய குழு ஆட்சியானது நிக்கரகுவா மக்களினுல் கைப்பற்றப்பட்டது. இங்கு 1930 தொட்டு அந்நிய ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டம் நடைபெற்றுவந்தது. இதனை முதலில் சண்டினே (இவர் பின் சோமோசாவினுல் வஞ்சகமாகக் கொல்லப்பட்டார்) என்பவர் தொடக்கி வைத்தார். பின் 1961 அளவில் சண்டினேவின் பெயரைத்தாங்கி சன்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணி (Fsln) எனும் கெரில்லா அமைப்பு உருவாக்கப்பட்டு இறுதியில் 1979 ஆடிமாதம் வெற்றியும் கண்டது. இவ்வெற்றியில் பெண்களின் பங்கு குறிப்பிடத்தக்கது.

## பெண்கள் போராளிகளாதல்

ஏனைய நாடுகளைப்போல் நிக்கரகுவாவிலும் முதலில் ஆண்களே போராட்டங்களில் பங்குபற்றி வந்தனர். காலம் செல்லச் செல்ல ஒவ்வொரு குடும்பத்திலும் பிள்ளைகள் இப்போராட்டங்களில் தமது எதிர்கால வாழ்வினை வளமாக்கிக் கொள்ளும்பொருட்டு ஈடுபடத் தொடங்கவே அப்பிள்ளைகளைப் பெற்ற தாய்மார் தமது சின்னஞ்சிறுசுகளது எதிர்கால வாழ்வை வளமாக்க வேண்டியதில் தமக்குள்ள பொறுப்பினை உணர்ந்து தங்களது பிள்ளைகளைப் பாதுகாக்கும் பொருட்டும், அவர்களது எதிர்கால வாழ்வை வளமாக்கும் பொருட்டும் தாமும் இப்போராட்டங்களில் நேரடியாக ஈடுபடத் தொடங்கினர். அங்கும் பெண்கள் இவற்றில் ஈடுபடுதலை ஆண்கள் பலமாக எதிர்த்தனர். ஒரு சில ஆண்கள் ஆதரவளித்த போதிலும் பெரும்பகுதி பெண்கள் தமது கணவன்மாரால் அடித்துத் துன்புறுத்தப்பட்டனர். எது எப்படி இருந்தபோதிலும் அவர்கள் தமது கடமைகளைச் சரியாக உணர்ந்தமையானது, அவர்களை இச்செய்கைகள் எந்தவகையிலும் தடுக்கமுடியாததாக உருவாக்கியது.

## அம்புறெனக்கின் உதயமும் அதன் நடவடிக்கைகளும்

1977 புரட்டாதியில் சன்டினிஸ்டா தேசிய விடுதலை இயக்கத்தினதும் தொழிலாளர் எதிர்ப்புகளதும் கூட்டுமுயற்சியினுல் தேசியப் பிரச்சனைகளோடு சம்பந்தப்பட்ட மாதர் இயக்கம் (Ampronac) எனும் ஒரு பெண்கள் அமைப்பு ஆங்காங்கிருந்த பெண்கள் அமைப்புகள் இணைவதனூடாக உருவாக்கப்பட்டது. இவ்வியக்கமானது தனித்துப் பெண்கள் பிரச்சனையில் பங்கு பற்றாது ஏனைய முக்கியமாகத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றினர். இதன் உறுப்பினர்கள் எந்த அரசியல் கோட்பாட்டையும் தழுவ இடமளிக்கும் அதே வேளையில் அவர்களின் அம்புறெனெக் இயக்கத்துடனுன தொடர்புகள் பின்வரும் நோக்கின அடிப்படையில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தன.

1. நாட்டின் தேசிய பிரச்சனைகட்குத் தீர்வு காணும் வழிகளில் பெண்கள் பங்கை உருவாக்கல்
2. எல்லா மட்டங்களிலும் நிக்கரகுவா பெண்களது உரிமைகளைப் பாதுகாத்தல் (பொருளாதாரம், சமூகம், அரசியல்)
3. பொதுவாக மனித உரிமைகளைப் பாதுகாத்தல்.

இவர்கள் காணுமல் போனவர்கள் எங்கே? எனக் கேள்விகள் எழுப்பியும், சித்திரவதை, கற்பழிப்பு என்பவற்றுக்கு எதிராகக் குரலெழுப்புவதனூடாகவும் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டத்தினை ஆரம்பித்தனர். இது கிறிஸ்தவ சமூகத்துடன் இணைந்து நடாத்திய 1000 பேரடங்கிய கூட்டத்தில் எழுப்பப்பட்டது. இது தொடக்க காலத்திலிருந்து காணாமற்போன விவசாயிகட்காக நடாத்தப்பட்ட போராட்டத்தின் ஆரம்ப நாளாகக் காணப்பட்டது. எம் விவசாய சகோதரர்கள் எங்கே? கொலைகாரர்களே என்ன சொல்கிறீர்கள்? போன்ற கோஷங்கள் பொதுஜன இயக்கங்களிலும் மக்களிடையேயும் இருந்து எடுக்கப்பட்டுச் சகல இடங்களிலும் கேட்கும்வகையில் சொல்லப்பட்டது. கார்த்திகை, மார்கழி மாதங்களில் அம்புறுனைக் கண்டனக்கூட்டங்களை நடாத்தியது. அத்துடன் மார்கழி 24இல் பெருந்தொகையான பொதுசன ஜனநாயக இயக்கங்களால் நடாத்தப்பட்ட ஊர்வலத்தில் கலந்துகொண்டார்கள். இந்த ஊர்வலம் அரசினால் கொடூரமாக அடக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தை மாதம் நிகழ்ந்த போராட்டத்தில் பிரபல அங்கத்தவர் பீட்ரோ யோரகுயிஸ் கமரோவின் கொலை, முதலாவது தேசிய வேலை நிறுத்தப் போராட்டம், காணாமற்போன விவசாய அரசியல் கைதிகளது குடும்பங்களால் சர்வதேச ஐக்கிய ஸ்தாபன (United Nations) காரியாலயங்கள் கைப்பற்றப்பட்டமை என்பன மக்களது சிந்தனையில் தாக்கத்தினை ஏற்படுத்தியமையினால் இவற்றில் அம்புறுனைக் குழுவினர் பெருமளவில் ஈடுபாடு கொண்டு செயல்பட்டனர். கமரோவின் படுகொலை குறித்துத் தேசியரீதியிலான ஆர்ப்பாட்டங்களிலும் வேலை நிறுத்தங்களிலும் பங்குபற்றியதோடு இக்கொலைகள் தனிப்பட்ட சிலரால் எதேச்சையாகச் செய்யப்படும் செயல் அல்ல. இது கடந்த 50 ஆண்டுகளாக அரசினால் நடாத்தப்படும் திட்டமிட்ட கொலைகளில் ஒன்று என விளக்கி ஓர் அறிக்கையும் பிரசுரித்தது. மற்றும் காரியாலயங்களைக் கைதிகளது குடும்பங்கள் கைப்பற்றியமையை ஆதரித்ததோடு வேறு இயக்கங்களையும் ஆதரவு நல்குமாறு கோரியது.

இந்தக் கைப்பற்றுதல் நடவடிக்கைகளினால் சுயதைரியம் அடைந்திருந்த மக்களினைக் கொண்டு இதற்கு ஆதரவாக மறியல் போராட்டங்களை நடத்தியது.

இவ்வியக்கத்தினால் இவ்வாறு எடுக்கப்பட்ட போராட்டங்களில் ஏற்பட்ட முன்னேற்றமானது, இதன் 60 பேர்கொண்ட சிறு குழுவிலிருந்து 1000 ற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைகொண்ட இயக்கமாக வளர உதவியது. இது பங்குனிமாதத் தொடக்கத்தில் மாதர்வாரம் என ஒன்றினை தொடங்கி தமது பிரகடனத்தில் "அடக்குமுறை ஒழிப்பு, கூட்டசுதந்திரம், அட்டூழியங்கட்குப் பொறுப்பானவர்களை நீதியின்முன் நிறுத்தல், வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பைத் தடுத்தல், பெண்களுக்குப் பாரபட்சமான சட்டங்களை ஒழித்தல், சமவேலைக்குச் சம சம்பளம், பெண்களை அடிமைகொள்ளாமை" எனும் கோரிக்கைகளை முன்வைத்தது. இவ் மாதர்வாரமானது சர்வதேச பெண்கள் இயக்கத்தினைத் திருப்திப்படுத்தும் ஒரு பாசாங்கு நடவடிக்கையாக இல்லாது தமது மக்களது சுதந்திரபோராட்டத்திற்குப் பெண்களை அறைகூவும் ஒரு நடவடிக்கையாக அமைந்திருந்தது.

இந்த மாதர் இயக்கமானது சித்திரை 9இல் விவசாய, தொழிலாளர் சங்கத்தினால் (A.T.C.) நடாத்தப்பட்ட பட்டினி யாத்திரையில் பங்கேற்று அரசின் மோசமான அடக்குமுறைக்கும் உள்ளாகியது. அம்புறுனைக்கானது தன்னைப் பொதுப் போராட்டங்களில் இணைத்துக்கொண்ட தன்மையை இவ்வாறு பங்கேற்ற நடவடிக்கை உறுதிப்படுத்தியது. இதனால் மக்களிடையே இதற்கான மதிப்பு மேலும் வளர்ந்து உறுதிப்படுத்தப்பட்டது.

1978 ஆடி மாதத்திலிருந்து சர்வாதிகார எதிர்ப்பு இயக்கமானது ஆழமாகச் செயற்படத் தொடங்கியது. அடக்குமுறையில் பலியானவர்களது மரணச்சடங்குகள் ஆட்சியாளர்க்கு எதிரான பாரிய ஆர்ப்பாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டங்களாக உருவெடுத்தது. ஆவணி மாதத்தில் அரசினுல் விதிக்கப்பட்ட புதிய வரியானது 22 அமைப்புக்களினுல் உருவாக்கப்பட்ட ஐக்கியப்பட்ட மக்கள் இயக்கத்தினது (MPU) போராட்டத்தின் ஆரம்பத்திற்கு வித்திட்டது. இப்போராட்டத்தில் அம்புறுனக்கானது துண்டுப்பிரசுரம், சுவரொட்டிகள் மூலம் பெண்களைப் போராட்டத்தில் அணிதிரளுமாறு கோரியது. சிறு பட்டினங்களில் 500 தொட்டு பெரும் நகர்களில் 8000 வரை கொண்ட பெண்கள் இதற்கு எதிராக அணிதிரண்டனர். வேறும் பல பட்டினங்களில் ஏற்பட்ட எழுச்சிகள் சன்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணியின் இராணுவ நடவடிக்கைகளோடு இணைந்து நடாத்தப்பட்டது. அம்புறுனக் இயக்கமானது தெருச்சண்டைகளிலும் Fsln உடன் இணைந்தது. ஆனுல் துரதிர்ஷ்டவசமாக இப் (1978) புரட்டாதி எழுச்சியானது அரசினுல் அடக்கப்பட்டது. தொடர்ந்து பெண்கள் சிறையிலிடப்பட்டுச் சித்திரவதைக்கு உள்ளானுர்கள், வீடுகள் சோதனை இடப்பட்டு எரிக்கப்பட்டன. கணவன்மார் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

இவ் அடக்கு முறைகளின் எழுச்சியிலிருந்து சிறுசிறு பெண்கள் குழுக்கள். ஐக்கியப்பட்ட மக்கள் இயக்கத்துடன் (MPU) தொடர்புகொண்டு இரகசிய மருத்துவ நிலையங்களை நிறுவி வெடிகுண்டுகள், மருத்துவப் பொருட்கள் சேகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். 1979 ஆடி எழுச்சியில் இவ் அம்புறுனக் இயக்கப் பெண்கள் நேரடியாகவே Fsln இராணுவத்திற்குத் தேவையான உதவிகளை நல்கினர். 30% மான பெண்கள் இராணுவரீதியிலான நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்கேற்க, மற்றும் பெண்கள் ஆயுதங்களை மறைத்து வைத்தல் காயமுற்ற போராளிகட்குச் சிகிச்சையளித்தல் போன்ற உதவிகளை நல்கினர்.

இவ் எழுச்சியானது வெற்றியில் நிறைவெய்தியபோதிலும் நாடு, பலவற்றினைச் சீரமைக்கவேண்டிய நிலமையில் இருந்தது. பட்டினங்கள், பாடசாலைகள், மருத்துவமனைகள் அழிக்கப்பட்டிருந்தன. 40,000 பிள்ளைகள் அனுதைகளாயினர். 2,00,000 குடும்பங்கள் வீடுகளை இழந்திருந்தன. இந்நிலையில் அம்புறுனக் இயக்கமானது மருத்துவ உதவி நல்குதல், பாடம் கற்பித்தல், நிலங்களில் அறுவடைசெய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டது. இவ் இயக்கமானது இன்று AMNLAE (Association of Nicaraguan women 'Luisa Amanda Espinoza') எனும் பெயரில் இயங்கி வருகிறது.

(இக்கட்டுரையானது மெசான் பாட்டின், சுசி வைலட் என்பவர்களால் எழுதப்பட்ட வுமன் இன் நிக்கரகுவா (Women in Nicaragua) எனும் ஆங்கில நூலிலிருந்து தொகுக்கப்பட்டது.)

தொன்று தொட்டு மக்களில் ஒருசாரார்மீது அடக்கு முறைகள் ஏவப்படும் பொழுதே வன்முறைக்கு வித்திடப்படுகிறது. வரலாற்றில் என்றுமே அடக்கு முறைகளால் ஒடுக்கப்பட்ட ஒரு வர்க்க மக்கள் வன்முறையினை ஆரம்பிப்பதில்லை.

— பொல்லேர் ஃபிரெசயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுதான் மேன்மைமிகு அமெரிக்காவோ?

ஜனநாயகம், மனிதஉரிமை-பேச்சு, எழுத்து, சிந்தனை போன்ற சுதந்திரங்கள் நிறைந்த நாடாக வெளியுலகுக்குக் காட்டிக்கொள்ளும் அமெரிக்காவில் நடப்பது என்ன? சுதந்திரம், ஜனநாயகம் என்ற போர்வையில் ஆட்சிப்பீடம் தான் விரும்பிய சித்தாந்த வழியில் மக்களை இழுத்துச் செல்கின்றதா? ''மக்களின் சொர்க்கபுரி தான்'' எனக் கூறிக்கொள்ளும் அமெரிக்காவில் உள் விவகாரங்களை உற்றுநோக்கினால் அதன் சொத்தைகள் வெளிச்சத்துக்கு வரும். பிற நாடுகளிலுள்ள அரசாங்கங்களையும், நிறுவனங்களையும் அமெரிக்காவிற்குச் சாதகமாக செயல்படச் செய்வதற்காக மத்திய உளவு ஸ்தாபனம் (CIA) மிகநுணுக்கமாகவும் துரிதமாகவும் இரகசியமாகவும் செயற்பட்டு வருகின்றது. அதேபோன்று அமெரிக்காவிற்குள் உள்நாட்டுப் பாதுகாப்பு, சட்டம், மக்கள்நலம் என்றபோர்வையில் குறிப்பிட்ட சில ஆட்சியாளரின் சிந்தனைப்படி நாட்டை ஆட்சிசெய்ய இரகசியமாகவும். ஜனநாயக விரோத முறையிலும் செயற்படுவதே மத்திய அரசு புலனாய்வுத்திணைக்களம் (FBI) ஆகும். இத்திணைக்களமானது கொலைகள், குடும்ப விவகாரங்களில் தலையிடல், குடும்பங்களைப் பிரித்தல், அவதூறுப் பிரச்சாரம், முற்போக்கு இயக்கங்களை அழித்தல் போன்ற நடவடிக்கைகளிலீடுபட்டு வருகிறது.

**விரைவில் FBI மாதிரி புலனாய்வுப்பிரிவு**

உலகின் தலைசிறந்த உளவறியும் அமைப்புக்களான அமெரிக்க FBI, பிரித்தானிய M 15 போன்று இலங்கையில் தேசிய புலனாய்வுத் திணைக்களம் (NIB) என்ற ஒன்று விரைவில் அரம்பிக்கப்படவுள்ளது. இது ஜனாதிபதியின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும். அதேநேரம் தேசிய பாதுகாப்பு விடயங்களைத் திறமையாகக் கையாளக்கூடிய நிபுணர்களைக் கொண்டிருக்கும்.

தேசிய பாதுகாப்பிற்கு ஏற்பட்டுள்ள புதிய சவால்கள் குறிப்பாக வடபகுதியில் விரைவாகப் பரவிவரும் பயங்கரவாத நடவடிக்கைகளை உளவறிவதில் ஏற்பட்ட தோல்வியே இத்தகைய அமைப்பொன்றை விரைவாக ஸ்தாபிக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்திற்று...

தலைப்புச் செய்தி
SUN. 14-2-83

ஒரு நாட்டிற்கு எவ்வகையான அரசியல் சிந்தனை, வழிநடத்தல் தேவை என்பதனை அந்நாட்டிலுள்ள மக்கள்தான் தெரிவு செய்யவேண்டும். ஆனால் அமெரிக்காவில் அந்நாட்டு மக்களுக்கு எவ்வகையான சித்தாந்தம் பொருந்தும் எனத் தீர்மானித்து முடிவுசெய்வதில் பெரும் பங்கினை மத்திய அரசு புலனாய்வுத் திணைக்களம் வகிக்கின்றது. சோஷலிசம் மக்களுக்குப் பொருத்தமற்றது, அச்சிந்தனை மக்களை அணுககூடாது என்ற கருத்தினை இவர்கள் கொண்டுள்ளனர். இக்கருத்தினை நடைமுறைப் படுத்துவதற்காக, மத்தியஅரசு புலனாய்வுத்திணைக்களம் தாம் எக்கொள்கைகளை ஏற்கவில்லையோ அக்கொள்கைகளை உடையவர்கள் மக்களிடமிருந்து தெரிவு செய்யப்படுதலைத் தடுப்பதற்காக அவர்கள்மீது அவதூறுப் பிரச்சாரங்களை மேற்கொண்டு, மக்களிடமிருக்கும் அவர்களது மதிப்பினை உடைத்து விடுகின்றார்கள். 1950ன் காலகட்டத்தில் மக்கள் மத்தியில் தீவிர சிந்தனை தோன்றியதனால் சோஷலிசவாதிகள் வாக்குச் சீட்டுக்கள்மூலம் தெரிவு செய்யப்படக்கூடிய நிலை உருவாகியது. இந்நிலையானது தமது செயற்பாட்டிற்கு ஆபத்தானது என மத்தியஅரசு புலனாய்வுத்திணைக்களம் கருதியதனால், இதற்கான தீர்வாக ''கொயின்ஸ்ரல்புறோ''வை (மத்தியஅரசு புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டபூர்வமற்ற உளவு நடவடிக்கை — இதன் குறியீட்டுப்பெயரே கொயின்ஸ்ரல்புறோ) கொணர்ந்தது. இதன் மூலம் 1950ன் காலப்பகுதியில் சோஷலிசவாதிகள் மீதான வேட்டையாடல் தொடுக்கப்பட்டது.

மத்தியஅரசு புலனாய்வுத் திணைக்களம் தனக்குப் பிடிக்காத கொள்கையைக் கடைப்பிடிக்கும் தனியொரு நபரின் மீதே தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி முழுவதையும் செலவிட்டு அவரின் சிறு சிறு தவறுகளைத்தேடி அவரை மக்களில் இருந்து அந்நியப்படுத்துவதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொள்ளும். இந்த வகையில் சோஷலிசவாதியான கறுப்பினத்தைச் சேர்ந்த கினின்ரா டி பெரிமீது மத்திய அரசு புலனாய்வுத் திணைக்களம்கொண்ட அக்கறை குறிப்பிடத்தக்கது. ஒருமுறை சிக்காக்கோவில் டி பெரி சோஷலிசப் பிரச்சாரவேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் பொலிசார் அவரைக் கைதுசெய்து சுமத்திய குற்றச் சாட்டு ''அவர் தனது முன்னைய மனைவியுடன் ஒத்துழைக்கவில்லை'' என்பதேயாகும். இவ்வாறு அவர்மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தி அவருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த முயற்சித்தது. இவர் தனது வாழ்க்கையில் இப்புலனாய்வுத் திணைக்களம் எந்தளவிற்குக் குறுக்கிட்டது என்பது பற்றிக் குறிப்பிடுகையில் ''நான் ஒரு தொழிலைத் தேடிக்கொள்வேன், அது மூன்று நாட்களுக்குக்கூட நிலைக்காது. பின் வேறொரு தொழில் தேடுவேன் அதற்கும் நேர்வது அதேகதி தான். மத்திய அரசு புலனாய்வுத் திணைக்களம் எனது முதலாளியைச் சந்திக்கும். நான் பதவியில் இருந்து விரட்டியடிக்கப்படுவேன் எனக் கூறுகிறார். மற்றும் இவர் பங்கெடுத்த 1963 ஜனாதிபதித் தேர்தலிலும் 1964 நியுயோர்க் மேயர் தேர்தலிலும் புலனாய்வுத் திணைக்களம் குறுக்கிட்டு மோசடிகளை மேற்கொண்டது. இக் குறுக்கீடானது சட்டவிரோதமானது மட்டுமன்றி, மத்திய அரசு புலனாய்வுத் திணைக்களத்தின் கருத்துக்களை ஏற்காதவர்களுக்கும் எதிரானதாகும்.

வியட்னாம் மீது அமெரிக்கா தொடுத்த யுத்தத்தினை எதிர்த்தும், கறுப்பர்களின் உரிமைப் போராட்டத்திலும் மிகத்தீவிரமாகப் பங்குபற்றி வந்த முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த மல்கம் என்பவரின் திடீர் கொலையானது பெரும் புதிராகவேயிருந்தது. மல்கம் தனது செயற்பாட்டினால் கறுப்பின மக்களிடம் பெரும் செல்வாக்கினைப் பெறத் தொடங்கியதை மத்தியஅரசு புலனாய்வுத் திணைக்களத்தினால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை. அவரைச் சூழ ஒரு குழப்ப நிலையை உருவாக்கி அதனூடே ஒரு முஸ்லிமால் கொலை செய்யப்பட்டார். கொலையாளியை கொலை செய்வதற்காக அமர்த்தியதோ பெயர் தெரியாத ஆனால் முஸ்லிம் அல்லாத ஒருவனையாகும். அக்கொலைச் சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்களைக்கூட விசாரணையின்போது மத்திய அரசு புலனாய்வுத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்படாத மர்மம் புலப்படவில்லை.

அமெரிக்காவில் வளர்ச்சிபெறும் கறுப்பின இயக்கங்கள்மீது திட்டமிட்ட மோசடிகளை இப்புலனாய்வுத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. இந்தவகையில் 1961-ம் ஆண்டு நியூயோர்க்கில் ஒரு பகுதியில் நடைபெறவிருந்த இடைத்தேர்தலில் போட்டியிட முயற்சித்த பிராங்கிளின் மீது மேற்கொள்ளப்பட்ட அவதூறுப் பிரச்சாரத்தினால் அவர் அரசியலிலிருந்தே ஒதுங்க நேர்ந்தது மிகவும் வறியகுடும்பத்தில் பிறந்த கூலித்தொழிலாளியான இவர் சிறுவயதில் கோஷ்டி மோதல்களிலும் பின்னர் தொழிற்சங்க போராட்டங்களிலும் ஈடுபட்டு வந்தார். அக்கால கட்டத்தில் இவர் கைது செய்யப்பட நேர்ந்தது. இருப்பினும் நீண்டகாலமாக எதுவித குற்றச்சாட்டுகளுமின்றிச் சட்டபூர்வ நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டு வந்தார். தேர்தல் காலத்தில் முன்னைய சம்பவங்களைப் பெரிதாக்கி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டதினால் மக்கள் மத்தியில் இவர் ஒரு குழப்பக்காரன் என்ற கருத்தைப் பரப்பி, இவர்மீது திட்டமிட்டு கறை பூசப்பட்டது.

மத்திய அரசு புலனாய்வுத் திணைக்களம் மனிதஉரிமைத் தலைவர்களின் குடும்ப விவகாரங்களில் தலையிட்டு அக்குடும்பங்களைப் பிரித்து, அதன்மூலம் மக்கள் மத்தியிலிருக்கும் அவர்களது செல்வாக்கைச் சிதைத்துவிடுமளவுக்கு தனது செயற்பாடுகளை கொண்டிருந்தது. ''ACTION'' எனும் மனிதஉரிமைக் குழு ஒன்றில் சேவை செய்துவந்த வெள்ளையினப் பெண்ணொருவர் வேறு ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்களுடன் பாலியல் தொடர்பு கொண்டுள்ளார் என அவர் திருமணம் செய்திருந்த கறுப்பினக் கணவனுக்கு ''ஒரு உண்மைச் சகோதரி'' எனக் கையொப்பமிட்டு கடிதம் அனுப்பப்பட்டது. மற்றும் கறுப்பின விடுதலை இயக்கத்திலீடுபட்டவண. சார்ள்ஸ், ''கிட்டத்தட்ட எனது திருமண வாழ்வையே அழித்துவிட்டார்கள்'' என ஒருமுறை குறிப்பிட்டார். இதற்காக இவர் அண்மையில் மத்திய அரசு புலனாய்வுத் திணைக்களத்திற்கு எதிராக ஆறுமில்லியன் அமெரிக்க டொலரை நஷ்டஈடாக கோரினார். கட்சிப் பணத்தை தலைவர்கள் கையாடல் செய்கின்றார்கள் என்பது போன்ற குற்றச்சாட்டுகளைக் கட்சி அங்கத்தவர் மத்தியில் பரப்பி அவர்களிடமிருந்து தலைவர்களின் மதிப்பைக் குறைத்து, அத்தலைவர்கள் மீது புலனாய்வுத் திணைக்களம் சவாரிவிட முயற்சித்தது.

மார்டின் லூதர் கிங் என்பவர் கறுப்பர் விடுதலை, மனித உரிமை என்பவற்றில் ஈடுபட்டு அம்மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்குடன் திகழ்ந்தார். ஆனால் 1968-ல் இவரின் வசிப்பிடத்திலிருந்து வெகுதொலைவில் எங்கோவிருந்த ஒருவன் ஒருநாள் திடீரெனப் போய் எதுவித காரணமுமின்றி லூதர் கிங்கை கொலைசெய்துவிட்டு இரு கண்டங்களுக்கூடாக மூன்று மாதங்களுக்கு அலைந்து திரிந்தான். இவ்வாறு திரியும் போது கொலைஞன் செலவுக்குப் பணத்தை எங்கிருந்து பெற்றான்? இவன் ஏன் கொலை செய்தான் கொலைபற்றித் தெரிந்து உண்மைகளைக்கூட புலனாய்வுத் திணைக்களம் விசாரணையின்போது மறைக்க முயன்றதேன்? போன்ற வினாக்கள் பெரும் புதிராகவேயுள்ளன. கிங் தனது செவிகளை அசைத்தால்கூட அது திணைக்களத்துக்குத் தெரிந்துவிடும் அளவுக்குப் பின்தொடர்ந்ததுடன், கொலைசெய்யப் படுவதற்கு ஆறு வருடங்களுக்கு முன்பிருந்தே அவரது மதிப்பைக் குறைக்கவும், அழிக்கவும் தீவிரமாக செயற்பட்டு வந்தது. உண்மையில் இக்கொலைக்குக் காரணம் கிங் மீதும், கறுப்பர் உரிமைமீதும் கொண்ட வெறுப்பேயாகும்.

மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று வந்த சோசலிஸ்டுகள்மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு அவர்களை அழித்துவிட திணைக்களம் முயற்சித்தது. அதற்காகத் தமது ஏஜண்டுகளை அக்கட்சிகளுக்குள்ளும், இயக்கங்களுக்குள்ளும் அனுப்பி உட்பூசல்கள், ஒற்றுமையின்மையை உருவாக்கி எதிரியுடனல்லாது தமக்குள்ளே மோதல்கள் ஏற்பட வழிசமைத்தார்கள். அத்துடன் சோசலிஸ்டுக்கள், மார்ஜுவானா போன்ற போதைப் பொருட்களை பாவிக்கிறார்கள் போன்ற பொய்க் குற்றச்சாட்டுகளை சுமத்தி அவர்களது செல்வாக்குகளை மக்களிடமிருந்து அழிக்கும் நடவடிக்கையிலும் ஈடுபடலாயினர்.

இவ்வாறு அந்நாட்டுமக்களின் மனிதவுரிமைகள் சிந்தனை, செயற்பாடுகள் என்பவற்றை மிகக்கேவலமான முறையில் மத்தியஅரசு புலனாய்வுத் திணைக்களம் போன்ற நிறுவனங்களுக்கூடாக அடக்கியழித்து, குறிப்பிட்ட சிலரின் சிந்தனை முறையில் ஆட்சி செலுத்தப்பட்டுவரும் அமெரிக்காவின் அரசியற் சட்டமோ, வெகு அழகான வார்த்தைகளால் எழுதப்பட்டதாகும். 1781-ம் ஆண்டு அரசியல் சட்ட முன்னுரையில் குறிப்பிட்டதோ ''முன்னைவிடச் செம்மையான கூட்டமைப்பு உண்டாகவும், நீதியை நிலைநாட்டவும், உள்நாட்டில் அமைதி நிலவச் செய்யவும், நாட்டின் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யவும், மக்களின் நலத்தைப் பேணி வளர்க்கவும், நமக்கும் நம்முடைய முன்னோருக்கும் விடுதலை வாழ்க்கையின் தலைசிறந்த நலங்களெல்லாம் இறையருளால் பெறவும் அமெரிக்க மக்களாகிய நாங்கள் ஐக்கிய அமெரிக்காவின் அரசியல் சட்டத்தை வரையறுத்து நிலைபெறச் செய்கிறோம்'' இச் செயற்பாடுகளானது, அமெரிக்கா தனது அகராதியில் நீதி என்பதற்கு அக்கிரமம் என்று விளக்கம் அளிக்கின்றதோ என எண்ணந் தோன்றுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை வைத்தியம்
சிறந்த எண்ணெய்வகைக்கு பரம்பரை மருத்துவர்
நாட்பட்ட நோய்கள்
கிரந்தி நோய்வகை
நிவாரணம்பெற நாடுங்கள்
டாக்டர் என். பஞ்சலிங்கம்
பாக்கியம் டிஸ்பென்சறி,
கண்டி றோட்,
பரந்தன்.

*அன்பளிப்பு*

*உகந்த*

*நண்பருக்காய்.......*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு

ஸ்ரீமகள் ரேடர்ஸ்

347, ஆனந்தபுவழிபுரம்,

திருகோணமலை.

* சிறந்த சுத்தமான சைவ உணவு

* குளிர்பானவகை

* மாஜரின், பட்டர்......

ஓடர்கள் ஏற்று உடன் செய்துகொடுக்கப்படும்.

விஜயம் செய்யுங்கள்

கண்ணன் லொட்ஜ்

இராமநாதன் வீதி, (பல்கலைக்கழகச் சந்தி),

திருநெல்வேலி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org